REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 24உ. வெள்ளி (9—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 25உ. சனி (10—9—55) [இதழ் 75

வடக்கே அமையும் சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம்

கல்கத்தா, செப். 8—

ஆசியாவிலேயே முதன் முதலாக, ஒரு சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம் கல்கத்தாவில் துவக்கப்படவிருக்கிறதாம்.

இதனை, இந்திய சர்க்காரும், ஐ. நா.-வின் கல்வி, சமூக, கலாச்சார நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து துவக்குவர் என்று தெரிகிறது.

மேற்கு வங்க சர்க்கார், இந்த ஆராய்ச்சிக்கூடத்தின் மாளிகை அமைப்புக்காக நான்கு ஏக்கர் நிலம் வழங்கியிருக்கின்றனராம்!

தமிழர் பண்பாடும் வடவர் நாகரிகமும்

போருக்குப் படை திரட்டியவர் நாம்— வேள்வி நடத்தியவர் வடநாட்டவர்

நமது சமூகத்திற்கு நன்மை செய்ய நமது பண்பாடு நமக்குத் தெரிய வேண்டும்

சட்டக் கல்லூரியில் அண்ணாதுரை

சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழா 7—9—55 அன்று நடைபெற்றபோது, தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. மற்றொரு பகுதி கீழே தரப்படுகிறது:—

"பெருந் தலைவர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர், 'ஒரு நாட்டின் மொழி, அந்த நாட்டில் உள்ள கலாச்சாரத்தை எடுத்துச் சொல்வதற்குரிய கருவிதான்,' என்று பேசியிருக்கிறார்.

"பல வர்ண சித்திரங்கள் தீட்டப்பட்டு விளங்குகிறது ஒரு பானை; அது களிமண்ணால் செய்யப்பட்டது; 'களி மண்ணினால்தான் பானை செய்யப்பட்டிருக்கிறது,' என்பதற்குப் பதிலாக, 'பானையின் அழகுத் தோற்றத்தையும், உருவத்தையும் சொல்லுவதற்குத்தான் களி மண் இருக்கிறது,' என்றால், என்ன பொருள் அதற்கு?

"பண்பாடு, நாகரீகம் என்பது மொழியின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும்; அந்த உண்மையை மறைத்துவிட்டு, 'பண்பாட்டை எடுத்துச் சொல்லுவதற்காக மொழி இருக்கிறது,' என்பது எப்படி நியாயமாகும்?

"மொழி வளருகிறது; பண்பாடும் அதற்கொப்ப வளருகிறது என்பதை மனித சமூக வரலாற்றில் நன்கு காணலாம்;

"பூந்தோட்டம் என்பது, நிலத்தைப் பண்படுத்தி, நல்ல பல பூச்செடிகளைப் பாதுகாப்புடன் வளர்த்த பிறகுதான் உருவாக முடியும்; அதுதான் உண்மையான பூந்தோட்டமாகவும் இருக்க முடியும்; பூந்தோட்டமொன்றிலிருந்து மலர்களைப் பறித்து வந்து வேறொரு தரையில் அந்த மலர்களைப் பரப்பி வைத்துவிட்டு, 'இது தான் பூந்தோட்டம்,' என்று கூறுவது பொய்யுரையாகும்;

"அதேபோல, பண்பாடு, மொழி வழியாகத்தான் வருகிறது;

"இந்த உண்மையை அந்தப் பெருந் தலைவர், 'உணராதவர்' என்பதல்ல; உணர்ந்தும், அவர் வீற்றிருக்கிற பெரிய இடம் அவரை உண்மையைக் கூறாமல் தடுத்து விட்டது மட்டுமின்றி, அந்த உண்மையையே திரித்துக் கூறவும் செய்திருக்கிறது; என்ன செய்வது? எல்லாம் 'பெரிய இடம்' தந்த அருள்; 'எத்தனை பெரிய தவறையும் துணிந்து செய்யத் தூண்டும் பெரிய இடமே நீ வாழி!' என்று கூறுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.'

"தமிழர்களுக்கு அவர்களுக்கென ஒரு மொழி உண்டு; அந்த மொழி வழி வளர்ந்த பண்பாடு உண்டு;

"பண்பாடு என்பது, வாழ்க்கை வழியாகும்; பண்பு என்பது, மக்களிடையே காலத்தால் உருவாக்கப்படும் வாழ்வு முறையாகும்;

"தமிழர்களின் வாழ்வு முறை, வாழ்க்கை வழி, பண்பாடு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஓங்கி வளர்ந்து வந்துள்ள ஒன்றாகும்;

தமிழர்கள், தங்களது ஓங்கி வளர்ந்துள்ள பண்பாட்டினையும், அந்தப் பண்பாடு வளரும் வழியான மொழியையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும்;

"வேறொரு பண்பாட்டையும், மொழியையும் ஏற்றுக் கொள்வதால், ஏற்கனவே நாம் கொண்டுள்ள தமிழர் பண்பாடு, ஒருபுறத்தில் அழியும்; மொழி மற்றொரு புறத்தில் அழியும்;

"மேலும் எந்த ஒரு பண்பாடும், காலத்தின் கருத்தை ஒத்து வளர்க்கப்படாவிட்டால் நாளாவட்டத்தில் பட்டுப்போகும் என்பதையும் மறந்துவிடக்கூடாது; கால மாற்றத்திற்கேற்ப, வளர்ந்துவரும் வேறு பல பண்பாடுகளின் சிறப்பான தேவையான நல்ல அம்சங்களையும் உள்ளடக்கிக் கொண்டு, ஒவ்வொரு பண்பாடும் காலத்தோடு ஒத்துவருமாறு வளர்க்கப்பட்டால், நீடித்து நிலைத்து, பெருமை தேடித்தர வல்லதாயிருக்க முடியும்;

"நாம், நமது தமிழர் பண்பாட்டின் சிறப்பினை எடுத்துக்கூறி, அந்தப் பண்பாடு இன்று வளர்ந்துள்ள காலத்தின்கருத்துக்கொப்ப வளர்க்கப்பட்டு, தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம்; ஒரு பழம் பெரும் சிறப்பு வாய்ந்த தனிப்பெரும் பண்பாடு வளர்க்கப்பட வேண்டுமென்று நாம் கூறும்போது சிலர், 'வேறு ஒரு பண்பாடு அழிந்துபடும்' என்று அஞ்சுகிறார்கள்;

"ஒரு பண்பாடு, மற்றொரு பண்பாடு வளருவதினால் அழிந்துபடும் என்று கூறினால், 'அழிந்துபடும்' என்று கருதப்படுகிற பண்பாடு, 'தனித்து நின்று வளர்வதற்குரிய அம்சங்களற்றது என்று பொருள்' என்பதை, அஞ்சுபவர்கள் கவனிக்க வேண்டும்;

"எகிப்து நாட்டில் நைல் நதி ஓரத்தில் வளர்ந்த பண்பாடு ஒன்று; ரோம் நாட்டில் வளர்ந்த பண்பாடு வேறு ஒன்று; டைபர் நதி தீரத்திலே வளர்ந்த பண்பாடு வேறு ஒன்று; ஆங்கில நாட்டில் தேம்ஸ் நதிக் கரையில் வளர்ந்த பண்பாடு மற்றொன்று; இப்படிப்பட்ட பண்பாடுகள் எல்லாம் ஒன்றை ஒன்று அழிப்பதற்காகவே வளர்ந்தவை அல்ல; 'ஒன்றை ஒன்று அழித்துவிட வேண்டும்,' என்பதற்காகவே அந்தந்தப் பண்பாடு கொண்டவர்களால் மேற்கொள்ளப்பட்டவையுமில்லை;

"அதேபோல, கங்கை நதிக் கரையிலே ஒரு பண்பாடு வளர்ந்தது; காவிரி நதி தீரத்திலே வேறொரு பண்பாடு வளர்ந்தது;

"இப்படி இருவேறான பண்பாடுகளும் ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல;

"இரு பண்பாடுகளும், 'அங்கே நல்லவை இருந்தால எடுத்துக் கொள்ளலாம்—இங்கே நல்லவை இருந்தால் கொடுக்கலாம்' என்ற ரீதியில் வளர்வதினால், தவறு ஒன்றும் இல்லை;

"இதைவிட்டு, ஒரு சாரார், தங்கள் பண்பாட்டை விட்டுவிட்டு மற்றொரு சாராரின் பண்பாட்டைத் தழுவ வேண்டுமென்பது எதற்காக?

"தமிழர்கள் தங்களுக்கென உள்ள பண்பாட்டை விட்டுவிட்டு

(4-ம் பக்கம் பார்க்க.)

'எழுத்து மூலம் மன்னிப்பு கோருக!'

காட்மண்டு, செப். 8—

புரட்சித் தலைவர் டாக்டர் கே. ஐ. சிங், தன்னை மன்னிக்கவேண்டுமென மன்னரிடம் எழுத்து மூலம் கோரவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

எழுத்து மூலமன்னிப்பில், அவர் தன்னைச் சந்தித்துப் பேசுவதற்கு மன்னர் சம்மதம் அளிக்கவில்லையாம்.

'இந்தியை புகுத்துவதற்கு அவசரப்படாதே!'

'15 ஆண்டுத் திட்டத்தை மேலும் ஒத்திப் போடு'

இந்திக் குழுவுக்கு கிடைக்கும் பதில்

புதுடில்லி, செப். 8—

இந்திக் குழு வெளியிட்டிருந்த கேள்விப் பட்டியலுக்கு ஆச்சரியமூட்டும் பல விடைகள் கிடைத்து வருகின்றனவாம்.

பல விடைகள் எதிர்பார்த்ததற்கு நேர் எதிரிடையானவையாயுள்ளனவாம்.

காந்தியாரின் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதில் காகா கலேல்கர் மிகத் தீவிரவாதியாயிருப்பவர்; இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று விருப்புபவர்—ஏற்றுக்கொண்டிருப்பவர்.

அவர், இந்திக் குழு அனுப்பிய விடைக்குப் பதிலறிக்கையில், 'இந்தியை ஆட்சி மொழியாக ஏற்பதற்குத் தந்திருக்கிற காலம் போதுமானதல்ல; இன்னும் குறைந்தது பதினைந்து ஆண்டுகளேனும், ஆட்சி மொழியாக இந்தியை மேற்கொள்ளும் திட்டத்தை ஒத்திப்போட வேண்டும்," என்று கருத்தறிவித்திருக்கிறாராம்.

"அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் 15 ஆண்டுக் காலம் போதுமானதல்ல," என்று விளக்கம் தந்திருக்கிறாராம்.

மேலும், பல மக்கள் சபை உறுப்பினர்கள், "இந்தியை, ஆங்கிலம் இருக்கும் இடத்தில் அமர்த்துவதற்கு, இப்போது திட்டமிட்டிருக்கும் கால அளவை நீடிக்க வேண்டும்" என்று கருத்துத் தெரிவித்திருக்கின்றனராம்.

அவர் பெற்ற வெற்றி!

புதுடில்லி, செப். 8—

கம்போடியாவில் உள்ள அகில உலக மேற்பார்வைக் குழுவின் இந்தியப் பிரிவு இராணுவத்தில் ஒரு 'காப்டனா'க இருக்கும் இளைஞர் ஒருவர், கம்போடிய அரசகுமாரி ஒருவரை மணந்து கொண்டிருக்கிறாராம்

"இதுவரையில், என் பையன் பெற்ற வெற்றிகளுள் இதுவே பெரிய வெற்றியாகும்,"

என்று, இங்குள்ள அந்த இராணுவ அதிகாரியின் தந்தையான வியாபாரி குறிப்பிட்டிருக்கிறார்.

தேபர்வியாக்கியானம்!

புதுடில்லி, செப். 8—

அ. இ. கா. க.-வின் கோவா பற்றிய தீர்மானத்தைக் கண்டிப்போருக்கு காங்கிரஸ் தலைவர் தேபர் பதிலளிக்க முயன்றனர்.

கோவா பிரச்சினை ஒரு 'தேசியப் பிரச்சினை'யாகவே இருந்துவந்தனதாம்; இனியும் அவ்வாறே இருந்துவருமாம்; அப்பிரச்சினை கட்சி அரசியல்களுக்குச் சம்பந்தமில்லாததாம்!

எல்லை மூடப்பட்டுவிட்டதால் மக்களுடையவும், சர்க்காருடையவும் பொறுப்பு அதிகரித்திருப்பதால் இந்தச் சந்தர்ப்பத்தில் சத்தியாக்கிரகம் செய்வது பொருந்தாதாம்!

மாநில மாநாட்டு நிதி

இதுவரையில்

ரூ. 17,000 மட்டுமே

சேர்ந்துள்ளது!

★

விபரமாக வெளியிட வேண்டியிருப்பதால் பங்குத் தொகைகளை முழுமையாகச் சேர்த்துத் தராத மாவட்டங்கள் உடனே சேர்த்துத் தருமாக!

9 9—55 —தலைமைக் கழகம்

சென்னையில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை?

மத்திய சர்க்காரிடம் காமராசர் கோரிக்கை

புதுடில்லி, செப். 8—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நிர்மாணிக்க உத்தேசித்திருக்கும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளில் ஒன்றை சென்னை மாநிலத்தில் துவங்க வேண்டும் என்று, முதன் மந்திரி காமராசர் இந்திய சர்க்காரிடம் தெரிவித்திருப்பதாயும், இந்திய சர்க்கார் அதிகாரிகள் இதுபற்றி யோசிப்பதாயும் கூறப்படுகிறது.

தென்னாட்டில் அப்படி ஒரு தொழிற்சாலை துவங்க, மத்திய சர்க்கார் இணங்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9-9-'55 வெள்ளி

அந்த முரண்பாடு!

★

கோவாவின் விடுதலை வரலாற்றை எழுதவிருக்கும் எதிர்கால வரலாற்றாசிரியர்கள், விடுதலை பெற்றதும் கோவா இணையப்போகும் பெரிய உப கண்டமான இந்தியாவின் 'ஒப்பற்ற தலைவர்—நிகரற்ற அரசியல் வாதி—உலகம் புகழும் சமாதான வீரர்' என்றெல்லாம் அவரது 'உறவினர்'களாலும், அவரது 'கடைக்கண் பார்வை'க்கு தங்கள் தன்மானம், வாழ்வு, வளம், உரிமை—அத்தனையையும் பறிகொடுத்துவிட்டவர்களாலும் ஏற்றிப் போற்றப்படுகிற பெரிய மனிதருடைய முரண்பட்ட 'ராஜீக'த்தின் கோர விளைவுகளை எண்ணி எள்ளி நகையாடப் போகின்றனர் என்பதற்கு, பெரிய மனிதரான பண்டித நேருவின் தலைமையில் இயங்கும் இந்தியப் பேரரசு, கோவா பிரச்சினையில் கடைப்பிடித்துவரும் நாளுக்கொரு முறை வேறுபடும் கொள்கையே போதுமான சான்றாகும்.

'இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை சமாதானத்தை அடிப்படையாகக்கொண்டது. எங்கள் பண்டிதரின் கண்டுபிடிப்பு—'பஞ்சசீலம்' கேளீர்! அதன் சிறப்பினைப் போற்றுவோர் சூட்டும் புகழ்மாலை காணீர்! உலக சமாதானத்தை நிலைநாட்டுவதில் பண்டிதரின் சேவைக்கு ஆதரவு தாரீர்!'—என்று பேசுகின்றனர் இங்குள்ளோர்!

பலப்பல காரணங்களால் வெளிநாட்டவர் அவ்வப்போது தரும் பாராட்டுரைகளால் மலரும் பண்டிதரின் முகவிலாசத்தை அரசியல் முதலீடாக்கி, மக்களிடமிருந்து 'இலாபம்' தட்ட முற்படவும் தயங்குவதில்லை, இந்திய தேசீயவாதிகள்.

பண்டித நேருவின் முரண்பட்ட போக்கினால் விளையும் விபரீதங்களுக்கு, அவரைக் கூரைமேல் ஏற்றி வைத்துக் கூவச் செய்பவர்களும்தான் பொறுப்பாளர்களாயிருக்க வேண்டிவரும்.

"தனிப்பட்ட முறையிலோ, அல்லது கூட்டமாகவோ கோவாவில் 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபடுவது, இப்போது நிலவும் சூழ்நிலைகளில் விரும்பத்தக்கதல்ல;

"கோவாவில் இதுவரை நடந்தவை, நடந்தவைகளாயிருக்கட்டும்; ஆனால், நாம் தொடர்ந்து 'சத்தியாக்கிரக' வழியை மேற்கொள்ளுவது, கோவா விடுதலைக்கு எந்த வகையாலும் வழி செய்யாது; மாறாக, கோவா விடுதலைக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும்,"

என்று பிரதமர் நேரு, இரண்டு தினம் முன்பு ராஜ்யங்கள் சபையில், தனது வெளிநாட்டுக் கொள்கை பற்றிய விவாதத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"'சத்தியாக்கிரகம்' விரும்பத்தக்கதல்ல. கோவா விடுதலைக்கு உதவாது; முட்டுக்கட்டையாக விளங்குவது" என்று பண்டிதர் வர்ணித்திருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து, பம்பாய் சர்க்கார், பம்பாய்—கோவா எல்லை, பம்பாய்—டாமன் எல்லை இங்குள்ள போலீசாருக்கு 'எவரையும் கோவா எல்லைக்குள் நுழைய விடாதே!' என்று உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

ஆனால் பிரதமர் பண்டித நேரு, கடந்த ஆகஸ்டு 15-ந் தேதியன்று, கோவா விடுதலைக்காக 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபடப் போவதாக அறிவித்த ஆயிரக்கணக்கான தொண்டர்களை பகிரங்கமாகவே வாழ்த்தினார்; 'செல்க-வெல்க' என்று ஆசி கூறினார்.

பதினெட்டு நாட்களுக்குப் பிறகு, தான் வழங்கிய நல்லாசியும், வாயுரை வாழ்த்தும் இருபதுக்குமதிகமான உயிர்களைக் குடித்ததைத் தவிர வேறெந்த வித எதிர்பார்த்த பலனையும் தராது போகவே, 'சத்தியாக்கிரகம்' இப்போதுள்ள சூழ்நிலைகளில் தவறானது—விரும்பத்தக்கதல்ல—பலனற்றது—முட்டுக்கட்டையானது' என்று பேசுகிறார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், கோவா விடுதலைக்கு என்று கூறி, இப்போது போலவே 'சத்தியாக்கிரகத்'தில் ஈடுபட முனைந்தவர்களை இந்திய எல்லையிலேயே தடிகொண்டு தடுத்து நிறுத்தி,'அன்னியரின் ஆதிபத்திய உரிமைக்கு உட்பட்டிருக்கும் எல்லைக்குள் நுழைவது சட்ட விரோதமானது; இந்தியாவின் சமாதானக் கொள்கைக்கு முரணானது' என்று,இந்திய சர்க்காரின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இதே பிரதமர் நேருதான் பேசினார். அப்போதும் தமது 'இராஜ தந்திர', 'அகில உலக' செல்வாக்கினாலேயே கோவா விடுதலையைப் பெற்றுவிட முடியும் என்று பறைசாற்றினார்.

இரண்டு ஆண்டுகளாகியும் தான், 'புகழேணி'யில் மேலும் பல படிகள் உயரே ஏற்றப்பட்ட பின்னும், தனது ராஜீக', 'உலக செல்வாக்கு' கோவா விடுதலையைப் பெற்றுத் தரத் தவறிவிட்டது என்ற உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியாமல், வெட்கமும்—வேதனையும் கடுந்துவிட்டதால், 'ஆத்திரப்பட்ட' பண்டித நேரு, கோவாவிற்குள் ஆயிரக்கணக்கானோர் நுழைவதைப் பகிரங்கமாக ஆதரித்தார்—ஆசி வழங்க முற்பட்டார் என்று வெளிநாட்டு அரசியல் பார்வையாளர்கள் கருதுவதைத் தவிர்த்துவிட முடியாது.

முதலில், கூடாது என்று தடுத்தார்; பின்பு ஆதரித்தார்—ஆசி வழங்கினார்; பின்னர், ஏசிப் பேசுகிறார்; இகழ்ந்துரைக்கிறார்; 'சத்தியாக்கிரகம்' பற்றி புதுப்புது வியாக்கியானங்கள் தருகிறார்; அவரது இந்த முரண்பட்ட போக்கிற்கு, இருபது உயிர்கள் விலையாகத் தரப்பட்டிருப்பது வேதனை தரக்கூடியது. மேலும் அவரது இந்த முரண்பாடு, அவர் ஏற்றப்பட்டிருக்கும் 'புகழ் ஏணி'யின் உண்மையான உயரத்தையும், தன்மையையும் உணர்ந்துகொள்ளவும் உதவுவதாகும்.

பலர் சித்திரவதைக்குள்ளாகி, நெஞ்சு வேகும் கொடுமைகளுக்கு இலக்காகி, இருபதுக்கும் அதிகமானோர் தங்கள் இன்னுயிரை ஈந்து பண்டிதருக்கு உணர்த்தியிருக்கின்றனர்—'அவர் கோவாப் பிரச்சினையில் கடைப்பிடித்த கொள்கை தவறானது,'—என்று!

இப்போது கூறுகிறார்—'நாம் கடந்த ஆறு அல்லது எட்டு மாதங்களாக மேற்கொண்டுள்ள பொருளாதார நடவடிக்கைகளும் மற்றும் இதர இயக்கங்களும் கோவா விடுதலைக்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன — கோவா பிரச்சினையை முழுவதுமாகத் தீர்த்து வைக்கவிருக்கின்றன; ஆனால், எப்போது பலன் கிடைக்கும் என்று என்னால் சொல்ல முடியாது,'—என்று!

ஆறு அல்லது எட்டு மாதங்களாக, 'எப்போது பலன் தரும்' என்று கணிக்க முடியாத இயக்கங்கள்—நடவடிக்கைகள், கோவா விடுதலைப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது, ஆயிரக்கணக்கானோரை 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபட அனுமதித்தது ஏன்? ஆசி கூறியது ஏன்? இருபது உயிர்களைக் 'காவு' கொடுத்தது ஏன்?—என்று, நாட்டவர் எழுப்பும் கேள்விக்குப் பண்டித நேரு பதில் சொல்ல மாட்டார்; பதில் சொல்ல அவரது'உயர்ந்த நிலை', 'பெரிய இடம்' இடந்தராது!

ஆனாலும், நாட்டு மக்கள், அவர்களது கேள்விக்குரிய விடையை எதிர்காலம் தரும் என்பதையும் உணர்ந்துதானிருக்கின்றனர்.

'எப்படி உதவுவது' என்பதுதான் பிரச்சினையாம்!

விடுதலை போரில் உயிர்துறந்தோர் குடும்பத்தினருக்கு உதவி இல்லை?

புதுடில்லி, செப். 7—

"கோவா விடுதலைப் போரில் உயிர் துறந்தோர் குடும்பத்தினருக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் எதையும் சர்க்கார் பரிசீலிக்கவில்லை" என்று, ராஜ்யங்கள் சபையில், உதவி அயல் நாட்டு மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

"மாநில சர்க்கார்கள் சில அரசியல் தியாகிகளுக்கு நிதி உதவி செய்யவில்லையா?" என்று கேட்கப்பட்டபோது, பிரதமர் நேரு குறுக்கிட்டுச் சொன்னார்:—

"மத்திய சர்க்காரைப் பொறுத்த மட்டில், அது போன்ற உதவிகள் மேற்கொள்ளப்படவில்லை; இப்பிரச்சினையில், உதவி செய்வதில் எவ்விதத் தொந்திரவுமில்லை; ஆனால், எப்படி உதவுவது என்பதுதான் பிரச்சினையாகும்."

சென்னையிலா மின் அணுப் பதிவு துணை நிலையம்?

புதுடில்லி, செப். 7—

சர்வதேச மின் அணுப் பதிவு மத்திய நிலையமொன்று புதுடில்லியில் நிறுவப்படுமாம்; 1956 இறுதியில், இந்நிலையத்தை நிறுவும் வேலைகள் முடிவடைந்துவிடுமாம்.

சென்னை, பம்பாய், நாகபுரி, கல்கத்தா ஆகிய மாநிலங்களில், மின் அணுப் பதிவின் துணை நிலையம் அமைக்கப்படுமாம்; 1956 இறுதிக்குள் இவைகள் நிறுவப்பட்டுவிடுமாம்

வானொலி ஒலிபரப்பு, விமானங்கள் பறப்பது மற்றும் 'சிக்னல்'கள் ஆகியவற்றை இந்நிலையங்கள் பதிவு செய்யும் என்று, மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சென்னை மாநிலத்தில்

கைத்தறித் துணி உற்பத்தி

புதுடில்லி, செப். 7—

சென்னை மாநிலத்தில், கைத்தறிகளில் உற்பத்தியான துணியின் மொத்த அளவு முறையே 1951-ல் 2,705 5 இலட்சம் கெஜமும், 1952-ல் 3709 5 இலட்சம் கெஜமும், 1953-ல் 3995 6 லட்சம் கெஜமும், 1954-ல் 4203 3 லட்சம் கெஜமுமாக இருந்ததாகமதிப்பிடப்பட்டிருக்கிறதென்றும், சென்னை மாநிலத்திற்கு விநியோகிக்கப்படும் நூல்களில் 75 சதவிகிதம் கைத்தறிகளினால் உபயோகிக்கப்பட்டு வருகிறது என்ற அனுமானத்தின் பேரில், இந்த உற்பத்தி மதிப்பீடு கணக்கிடப்பட்டிருக்கிறது என்றும் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி இன்று ராஜ்யங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

மத்தியசர்க்காரில்

புதிய உத்தியோக பிரிவுகள்?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய, மாநில சர்க்கார்களின் பல்வேறு துறைகளுக்கும் அதிக அளவில் அதிகாரிகள் தேவைப்படுவதால், சுகாதாரம், நீர்ப்பாசனம், காட்டு இலாகா, விசை எஞ்சினீயர்கள் என்ற புதிய உத்தியோகப் பிரிவுகள் மத்திய சர்க்காரில் ஏற்படுத்தப்படுமாம்; மாநிலங்களின் தேவைகள் இப்பிரிவுகளிலிருந்து ஒழுங்கு செய்யப்படுமாம்.

உதவி செய்க!

புதடில்லி, செப் 7—

இரயில்வே காலனிகள் அல்லது இரயில்வே தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களுக்குச் சமீபத்தில் வைக்கப்பட்டுள்ள கள் அல்லது மதுபானக் கடைகளை அப்புறப்படுத்துவதில் உதவிசெய்யுமாறு மாநில சர்க்கார்களை இரயில்வே இலாகாவினர் கேட்டுக்கொண்டுள்ளனர் என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் மந்திரி சபை கவிழும்?

ஜப்பான் நாட்டில் ஹடோயாமா தலைமையில் உள்ள மந்திரிசபை வீழ்ந்துபடலாம் என்று கூறப்படுகிறது.

வெளிநாட்டு மந்திரியான ஷிகெமெட்சு, அமெரிக்காவுடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது, நாட்டுக்கு வெளியே துருப்புகளை அமெரிக்கா வைத்துக்கொள்வதற்கு அனுமதித்துவிட்டதாக எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

ஷிகெமெட்சு நாளைய தினம் அமெரிக்காவிலிருந்து திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை

விரைவில் அறிவிக்கப்படும்!

கர்நூல், செப். 7—

ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் தொகை எவ்வளவு என்பதை திட்டக் குழு விரைவில் அறிவிக்குமென்று ஆந்திர முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

"முதலீட்டு வேலைத் திட்டங்கள் எதுவும் விலக்கப்படமாட்டாது; ஆனால், பல்வேறு செலவினத்தின் கீழ் தொகைகள் குறைக்கப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கவர்னர் மீது துரோகக் குற்றம்?

கோவாப் பகுதியைச் சேர்ந்த டையூ திட்டுப் பகுதிகளின் ஆட்சி உரிமையை போர்ச்சுகல் கைவிட்டுவிட்டதா? — அப்பகுதிகளை நிர்வகிப்பதற்கு போர்ச்சுகீசியர் வெகுவாகச் சிரமப்படுகின்றனரா?—இதன் காரணமாகவே அப்பகுதியின் கவர்னர், பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவிப்பு தந்துள்ளாரா?—எவ்வளவு காலம் முடியுமோ அதுவரையில், தேசீய சக்திகளின் தாக்குதலைச் சமாளிக்க போர்ச்சுகல் முயலுகிறதா?—என்ற பிரச்சினைகள், கோவா பகுதியில் நிலை நிற்பதாகத் தெரிகிறது.

இதற்கிடையிலேதான், லிஸ்பனிலிருந்து டையூவுக்கு வந்திருக்கும் விசேட அதிகாரிகள், தனது 'விலகுதல் அறிவிப்பை' திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி கவர்னரை வற்புறுத்துகின்றனராம்.

டையூ கவர்னர், அவ்வற்புறுத்தலுக்கு இணங்காவிடில், போர்ச்சுகல் நாட்டிற்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டு, இராஜத் துரோகக் குற்றத்துக்காக அவர் மீது விசாரணை நடத்தப்படுமாம்

அவ்வித நிலைமை ஏற்படுமானால், டையூ திட்டுக்களின் நிர்வாகத்தை அப்பகுதி போலீஸ் கமிஷனர் மேற்கொள்வாராம்!

எல்லைத் தகராறு : நவம்பரில் மாநாடு

சென்னை—ஆந்திர மாநிலங்களின் எல்லைத் தகராறு சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் சுமூகமாகப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு, நவம்பர் முதல் வாரத்தில், சென்னையில், இரு மாநில மந்திரிகளின் மாநாடு நடைபெறுமாம்.

புதிய விதிகள் பிரகடனம்

சென்னை, செப். 7—

சென்னை அரசியலார், தனிப்பட்டவர்களின் காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், தனிப்பட்டோர் காடுகள் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் புதிய விதிகளைப் பிறப்பித்துள்ளனர்.

கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவோர் மீது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் புகார்களைத் தாக்கல் செய்ய கிராம அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் வழங்கும் வகையில் கிராமப் பஞ்சாயத்து சட்டத்தில் திருத்த விதிகள் செய்யப்படும்.

இந்திய இரயில்வேக்களில், மூன்றாவது வகுப்பு பெட்டிகளில் இன்னும் 926 பெட்டிகளுக்கு மட்டுமே மின்சார விசிறிகள் பொருத்தப்பட வேண்டியுள்ளது; 1949 ஏப்ரல் 1-ந் தேதியன்று கட்டப்பட்டு, இருபது ஆண்டிற்கு மேற்படாத மூன்றாவது வகுப்புப் பெட்டிகளில் மாத்திரமே மின்சார விசிறிகளைப் பொருத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

செப்டம்பர் 17-23: நாட்டுப் பிரிவினை வாரம்

அபிவிருத்தித் திட்டங்களுக்கு 11,000 கோடி ரூபாயா?

பொதுத் துறையும் - தனியார் துறையும் திரட்ட வேண்டியிருக்குமா?

புதுடில்லி, செப். 7—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது இதர அபிவிருத்தித் திட்டங்களின் செலவுக்காக பொதுத் துறையும், தனியார் துறையும் மொத்தம் ரூ 11,000 கோடிக்கு மேல் திரட்ட வேண்டியிருக்கலாமெனத் தெரிகிறது.

இந்தத் தொகையில், இரண்டாவது திட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்காகும் செலவு ரூ. 4,300 கோடியாகவும், இதர திட்டங்களுக்கும், பொதுத் துறையில் ஏற்கனவே அடைந்துள்ள வேலைகளுக்கும் செலவு ரூ. 4,500 கோடியாகவும் இருக்கும்.

இத்துடன் தனியார் துறையில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூ. 2,200 கோடி செலவழிக்க வேண்டியிருக்கும்.

பொதுத் துறைக்கும் மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும் ரூ. 8,800 கோடி திரட்ட வேண்டியிருக்கும்.

பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் ஆக இரண்டு துறையிலும் கைத் தொழில்களுக்கும், சுரங்கத் தொழிலுக்கும் போட உத்தேசித்துள்ள ரூ. 1,400 கோடியில் தற்போதைய நகல் திட்ட அடிப்படையின் விவரம் வருமாறு:—

இரும்பு உருக்கு ரூ. 425 கோடி;

செயற்கை பெட்ரோல் ரூ. 80 கோடி;

உருக்கு, மின்சார சாதனங்கள் உற்பத்திக்கான தொழிற்சாலைகள், இதர உற்பத்தியாளர்கள், உபயோகிப்பாளர்கள், பண்டங்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட கனரக இயந்திரங்கள் ரூ. 240 கோடி;

சிமெண்ட், மருந்துகள் ரூ. 100 கோடி;

தற்போதுள்ள சர்க்கார் தொழிற்சாலைகள் ரூ. 50 கோடி;

தாதுக்கள் ரூ. 75 கோடி;

அலுமினியம் ரூ. 30 கோடி;

ரசாயன உரங்கள் ரூ. 100 கோடி;

தொழிற்சாலை உபபோகிப்புப் பண்டங்கள் ரூ. 110 கோடி;

தட்டுமுட்டு சாமான்கள், சிறு தொழில்கள் ரூ 200 கோடி

சினிமா கொட்டகை முன்பு ஆர்ப்பாட்டம்

ஒருவர் பலி; பலருக்குக் காயம்

தான்பாத், செப். 6—

நகரில் ஒரு சினிமாக் காட்சி நடைபெற்றது; உள்ளூர் வர்த்தகர் சிலர் ஆட்சேபித்ததின் பேரில், சினிமா நிறுத்தப்பட்டது.

ஆனால் தொடர்ந்து அந்த காட்சியை நடத்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்ய, ஏராளமானவர்கள் சினிமா கொட்டகைமுன் கூடியிருக்கின்றனர்.

இரு சினிமா கொட்டகைகளை போலீசார் காவல் புரிந்திருக்கின்றனர்; அவற்றின் முன் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் — போலீசாருக்குமிடையே மோதுதல் ஏற்பட்டிருக்கிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கல் வீச ஆரம்பித்தனர் என்றும், இதனால் போலீசார் கூட்டத்தைப் பயமுறுத்திக் கலைப்பதற்காக ஆகாயத்தை நோக்கி வெத்துத் துப்பாக்கிக் குண்டுகளை வெடித்ததாகவும் கூறப்படுகிறது.

ஒரு உதவி போலீஸ்-இன்ஸ்பெக்டர் உட்பட பதினொரு போலீசாரும், மற்றும் பலரும், மோதுதலினால் காயம் பட்டனர் என்று கூறப்படுகிறது.

காயம் பட்டவர்களில் ஒருவர் மருத்துவமனையில் இறந்துபட்டதாகவும் தெரியவருகிறது.

நகரில் 144 தடைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

புத்தரின் 2,500-வது ஆண்டு பிறந்த நாள் விழா

டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையில் குழு

அடுத்த ஆண்டு, புத்தரின் 2,500-வது பிறந்த நாள் விழாவினைச் சிறப்புடன் கொண்டாடுவதற்கு டாக்டர் இராதாகிருஷ்ணனைத் தலைவராகக் கொண்ட விழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

'விழா கொண்டாட்டத்திற்காக ரூ. 8,56,000 செலவிடப்படும்,' என்று, கல்வி மந்திரியின் செயலாளர் டாக்டர் மோனே மோஹன் தாஸ் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

விழாவினை ஒட்டி, புதிய சாலைகள் அமைக்க, பழைய சாலைகளைத் திருத்த, தங்கும் விடுதிகள் நிர்மாணிக்க தண்ணீர், மின்சார வசதி செய்ய—இவற்றிற்காக சுமார் ரூ. 1.5 கோடி செலவிடப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

விழாவுக்கான திட்டங்களை வகுப்பதில் குழு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறதாம்.

இடம் பெயர்ந்த மாணவர்களுக்காக கல்கத்தா நகரத்திலும், அதன் சுற்றுப்புறத்திலும், இந்த ஆண்டில் புதிதாக ஆறு விஞ்ஞான, கலைக் கல்லூரிகள்—நான்கு கல்லூரிகள் ஆண்களுக்கும், இரண்டு கல்லூரிகள் பெண்களுக்கும்—ஏற்படுத்தப்படவிருக்கின்றன. இக்கல்லூரிகளில், மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பட்டறை சாலைகளும் ஏற்படுத்தப்படுமாம்.

'நாட்டிற்கு சிறந்த சேவை செய்தவர்கள்'

விருதுகள் வழங்கப்பட்டனர்

புதுடில்லி, செப். 7—

எட்டு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவின் அதிகார மாற்ற வைபவம் நடைபெற்ற 'ராஷ்டிரபதி பவனத்'திலுள்ள தர்பார் மண்டபத்தில், நாட்டிற்கு சிறந்த சேவைசெய்ததற்காகவும், உலக சமாதானத்திற்காக அரிய சாதனைகள் புரிந்தமைக்காகவும் பிரதமர் நேருவுக்கு, குடியரசுத் தலைவர் இராசேந்திரரால், 'பாரத ரத்னம்' என்ற விருது வழங்கப்பட்டது.

பரபல விஞ்ஞானிகள், எஞ்சினீயர்கள், கல்வி நிபுணர்கள், சமூகத் தொண்டர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கும் 'பத்ம வீபூஷணம்', 'பத்ம பூஷணம்', 'பத்ம ஸ்ரீ' போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

94 வயதான பிரபல எஞ்சினீயரும், நிர்வாகியும், தொழிலதிபருமான டாக்டர் எம். விசுவேசுவரய்யாவும் 'பாரத ரத்னம்' விருதை ஏற்றார்.

88 வயதானவரும், காசியைச் சேர்ந்த தத்துவ ஞானியும், இலக்கிய மேதையுமான டாக்டர் பகவன் தாசுக்கும் 'பாரத ரத்னம்' விருது வழங்கப்பட்டது.

'பெயர்களை மாற்றாதே'

மாநில சர்க்கார்களுக்கு மத்திய ஆட்சி உத்தரவு

தகுந்த காரணங்கள் இருந்தாலன்றி, கிராமங்களின் பெயர்களை மாற்றவேண்டாமென எல்லா மாநில சர்க்கார்களுக்கும் இந்திய சர்க்கார் தெரிவித்துள்ளதாம்.

சில தலைவர்களை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டியோ, அல்லது, அப்பகுதி மக்களின் உணர்ச்சிக்காகவோ கிராமங்களின் பெயரை மாற்றியமைக்கவும் கூடாதாம்.

சாத்தியமான வரையில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களின் பெயர்களும் மாற்றப்படக் கூடாதெனவும் குறிக்கப்பட்டுள்ளது.

'1692 பேருக்குக் காயம்; 183 பேர் மரணம்'

அணைக்கட்டுவேலைகளில் ஏற்பட்ட விபத்து பற்றி அமைச்சர்

புதுடில்லி, செப். 7—

ராஜ்யங்கள் சபையில், கேள்வி நேரத்தின்போது, பாசன இலாகா துணை மந்திரி, தாமோதர் பள்ளத்தாக்கு, துங்கபத்திரா அணைக்கட்டு வேலைகளில் ஏற்பட்ட விபத்துக்களில் 183 பேர் மாண்டனரென்றும், 1,692 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவித்துள்ளார்

'வரி விதிப்பு'க்கு எதிராகத் தீர்ப்பு

புதுடில்லி, செப். 6—

"வேறு சட்டம் ஒன்றை மக்கள் சபை இயற்றும் வரையில், மாநிலத்திற்கு மாநிலம் நடைபெறும் கொள்முதல் அல்லது விற்பனை மீது, மற்ற மாநில வர்த்தகர்களுக்கு வரி விதிக்கக் கூடாது,"

என்று, 'சுப்ரீம் கோர்ட் பெஞ்சு மெஜாரிட்டி' தீர்ப்பு அளித்திருக்கிறது.

* * *

எதிர்பார்க்கப்படுகிறதாம்!

புதுடில்லி, செப். 9—

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்தின் மீது கொள்முதல் அல்லது விற்பனை வரி விதிக்கக்கூடாதென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கூறியிருப்பதையொட்டி, அத்தகைய விற்பனை வரியை எல்லா மாநிலங்களும் ஒழித்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

பந்தயம் தந்த பலன்!

கரீம்கஞ்ச், செப் 6—

"1½-சேர் மண்ணெண்ணெய் குடிக்க முடியுமா? ரூ. 100 பந்தயம்," என்று கூறப்பட்டது.

பெனதோ சுபாரி என்ற 22 வயது தொழிலாளி பந்தயத்தை ஏற்றுக்கொண்டார்; அதன்படி ஒன்றரை சேர் மண்ணெண்ணெயையும் குடித்தார்.

ஆனால், அந்தோ! பரிதாபம்! வெற்றி பெற்ற பந்தயத்தொகையைப் பெறுமலேயே அவரது வாழ்க்கை முடிந்துவிட்டது.

பூனாவுக்கு அருகில் உள்ள சர்க்காருக்குச் சொந்தமான இந்துஸ்தான்பெனிசிலின் உற்பத்திச்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பெனிசிலின் மருந்து, அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் உற்பத்தி செய்யப்படும் பெனிசிலினுடன் ஒப்பிடக் கூடியதாக இருக்கிறது என்ற விவரம், இந்தியப் பெனிசிலின் மாதிரிகளை அந்த நாடுகளில் சோதித்துப் பார்த்ததிலிருந்து தெரியவந்திருக்கிறது.

90 மைல் துரத்திச் சென்றனராம்!

மற்றுமொரு கொள்ளைத் தலைவன் சுட்டுக்கொல்லப்பட்டான்

சுட்டுவீழ்த்தப்பட்ட மான்சிங் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், மற்றும் குஜார் என்ற கொள்ளையர்கள் ஆகியோரின் தலைவனாகப் 'பதவி' ஏற்றிருந்த பாபு சிங் என்ற பிரபல கொள்ளைத் தலைவனை மத்திய பாரத் போலீசார் துப்பாக்கிச் சண்டை ஒன்றின்போது சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

குவாலியருக்கு 30 மைல் வடக்கே இந்தத் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக போலீசார் வெளியிட்டுள்ள குறிப்பு தெரிவிக்கிறது

சுமார் 90 மைல் தொலைவிலிருந்து போலீசார் கொள்ளைக் கூட்டத்தினரைத் துரத்திக் கொண்டே வந்ததாகவும் போலீசார் தரப்பில் எவ்வித சேதமும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

'ஆண்டவன் விட்ட வழியாகட்டும்'

தூக்குக் கயிற்றிலிருந்து தப்பிய மன்னரின் பிரலாபம்!

நியூயார்க், செப் 3—

ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவை தூக்குக் கயிற்றிலிருந்து தான் காப்பாற்றியதாக அமெரிக்காவின் முன்னாள் தூரக்கிழக்கு சேனாதிபதியான டக்ளஸ் மக் ஆர்தர் தகவல் தந்துள்ளார்.

சக்கரவர்த்தியை போர்க் குற்றவாளியாக விசாரிப்பதானால் ஆத்திரமடையும் ஜப்பானிய மக்களை சமாளிக்க மேலும் 10 இலட்சம் அந்நியத் துருப்புகள் தேவைப்பட்டிருக்கும் என்று அவர் கூறினார்.

ஆனால், போரில் ஜப்பானிய இராணுவம் புரிந்த செயல்கள் யாவற்றுக்கும் சக்கரவர்த்தியே பொறுப்பு ஏற்று, 'ஆண்டவன் விட்ட வழியாகட்டும்,' என்று அவர் சொன்னது தான் தமக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளதாக மக் ஆர்தர் தெரிவித்தார்.

எப்பகுதி மாநில நிறுவனங்களுக்கோ?

"டீசல் ரோடு ரோலர்களை உற்பத்தி செய்வதற்காக, தொழில்கள் (அபிவிருத்தி—ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் ஒரு கம்பெனிக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது; நீராவி ரோடு ரோலர்களை உற்பத்தி செய்வது சம்பந்தமாக மற்றொரு கம்பெனி சமர்ப்பித்துள்ள திட்டமொன்று இப்பொழுது ஆராயப்பட்டு வருகிறது; கற்களை உடைக்கும் இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்று கிடைக்கப்பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது" என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தார் பிட்டுமன் கொதிகலங்கள், தார் பிட்டுமன் தெளிக்கும் சாதனங்கள், 'ஆஸ்பால்ட்' கலவை சாதனங்கள், காங்கிரீட் கலவைச் சாதனங்கள், சுண்ணாம்புக் கலவை இயந்திரங்கள் ஆகியவை போன்ற இனங்களை, இந்தியாவில் உள்ள பல கம்பெனிகள் ஏற்கனவே உற்பத்தி செய்துவருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரப்பர் உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதற்காகவும், ரப்பர் சாகுபடி வேலைகளில் ஆராய்ச்சி நடத்தி வருவதற்காகவும், ரப்பர் ஆராய்ச்சி கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றுக்கு இந்திய சர்க்கார் அங்கீகாரமளித்துள்ளது.

தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி

சென்னை சர்க்கார் திட்டம்

புதுடில்லி, செப். 7—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சிறு துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கென ரூ. 22.75 கோடி பெறுமான நகல் திட்டங்கள், மத்திய அரசாங்க போக்கு - வரத்து இலாகா மூலம் திட்டக் குழுவிற்கு வந்துள்ளன.

சென்னை சர்க்கார் சுமார் ரூ. 8 கோடி பெறுமான திட்டங்களைத் தந்திருக்கின்றனர்.

தூத்துக்குடியை ஒரு பெரிய துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும் அதில் அடங்கியிருக்கிறது.

சிறுசிறு துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கென பம்பாய் ரூ. 5.85 கோடி; சௌராஷ்டிரா ரூ. 2.3 கோடி; ஒரிசா ரூ 3 கோடி; ஆந்திரா ரூ 50 இலட்சம்; கட்ச் ரூ. 27 இலட்சம்—என திட்டங்கள் தரப்பட்டுள்ளனவாம்.

இந்தியா வரும்

வெளிநாட்டுத் தலைவர்கள்

புதுடில்லி, செப். 7—

ரஷ்யப் பிரதமர், எதியோபியா மன்னர், சவூதி அரேபியா மன்னர், தாய்லாந்து பிரதமர், லாவோஸ் மன்னர் ஆகியோர் இந்தியாவுக்கு வருகை தருமாறு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

இடைநிலைக் கல்விக் குழு நியமனம்

சீர்திருத்தம் பற்றி ஆலோசனை கூறுமாம்!

புதுடில்லி, செப். 7—

22 உறுப்பினர்கள் கொண்ட அகில இந்திய இடைநிலைக் கல்விக் குழு ஒன்றை இந்திய சர்க்கார் நியமித்துள்ளனராம்.

எல்லாக் கட்டங்களிலும், இடைநிலைக் கல்வி அபிவிருத்தி, பரவலாக்குவது ஆகியவை பற்றி சர்க்காருக்கு யோசனை கூறும் நிபுணர்களின் நிறுவனமாக இக்குழு செயல்படுமாம்.

அகில இந்திய தொழில் நுணுக்கக் கல்விக் கவுன்சில் அமைக்கப்பட்டுள்ளது போன்ற அடிப்படையில் இந்த இடைநிலைக் கல்லூரிக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளதாம்.

திருமணம்

28—8—55 காலை 9 மணி அளவில் பெரம்பூர் பாரக்ஸ் சாலை 96-ம் எண் இல்லத்தில் தோழர் க. ஜீவரத்தினம் — தோழியர் கோதைநாயகி திருமணம் தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மூவை ஆர். எஸ் பாண்டியன், ஆர். ஜார்ஜ் ஆகியோர் 'திருந்திய திருமணம்' குறித்தும், மணமக்களைப் பாராட்டியும் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

இத்திருமண விழாவின்போது, தோழர் மாரி அவர்களது பெண் மகவுக்கு 'பரிமளம்' என, தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களால் பெயரிடப்பட்டது; அதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

தி.மு.க. ஏழாவது ஆண்டுவிழா கொண்டாடுவீர்

சட்டக் கல்லூரியில் அண்ணுதுரை.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேறெரு பண்பாட்டைத் தழுவ வேண்டுமென்பது, தங்களிடமுள்ளதை விட்டுவிட்டு, வேறென்றுக்காக ஏங்கித் தவிக்கவேண்டியதாக முடியும்;

"தமிழர்கள், தங்களின் பழம் சிறப்புப் பெற்ற தனிப்பெரும் பண்பாட்டினை கால வளர்ச்சிக்கொப்ப அமைத்துக்கொண்டு, தொடர்ந்து அதனைப் பாதுகாக்க முற்படவேண்டுவதுதான் நியாயமாகும்; அப்படி நமது பண்பாட்டை வளர்த்தால், நமது சிறப்பு குறித்து உலகம் உணரமுடியும்; இந்த நிலையை மாணவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்;

"அண்மையில் பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்கள் தமிழ் மொழியின் சிறப்புக் குறித்துப் பேசுகையில்—'ழ' என்ற எழுத்து தமிழ் மொழிக்கே உரியது; உலகில் வேறெந்த மொழியிலும் இல்லாதது; தனித் தன்மை பெற்றது; அந்தப் பெருமைக்குரிய 'ழ' என்ற எழுத்தைத் தமிழர்கள், மாவட்டத்திற்கு ஒரு வகையாக உச்சரித்து, தமிழ் மொழியின் சிறப்பைப் பாழ்படுத்துகிருர்களே—என்று கூறி வருத்தப்பட்டார் என்று கேள்விப் பட்டேன்;

"'தமிழ் நாட்டில், தமிழ் மொழியின் ஒரு எழுத்து மட்டுமல்ல பாழ்படுத்தப்படுவது — தமிழ் மொழி முழுவதுமாகவே பாழ்படுத்தப்படுகிற இழிநிலை நிலவுகிறது; இந்த இழிநிலையைப் போக்க வேண்டும்; தமிழின் சிறப்புக்கு ஊறு செய்ய முனைவோரைச் சாடவேண்டும்; தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும்; அதன் அழிவை மனதில் கொண்டு பிறர் காரியமாற்றுவதைத் தடுக்க வேண்டும்,'—என்று நாம் கூறினுல், அதுபற்றி எல்லாம் சேதுப் பிள்ளை போன்றவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை; 'எண்ணிப் பார்ப்பதில்லை' என்ருல், முடியாததால் — அல்லது, விருப்பமில்லாததால் அல்ல; அவர்கள் வீற்றிருக்கிற 'பெரிய இடம்,' எண்ணிப் பார்க்க இடம் தருவதில்லை.

"நமது தமிழர் பண்பாடு காப்பாற்றப்படுவதற்கு-தொடர்ந்து காலத்திற்கொப்ப வளர்ந்து நமக்குப் பெருமை தேடித் தருவதற்கு—அந்தப் பண்பாடு வளர்ந்த வழியான தமிழ் மொழியை நாம் அலட்சியப் படுத்திவிடக்கூடாது; நமது சிறப்புக்குரிய பண்பாட்டின் மூலமான மொழி—நமது தாய் மொழியான தமிழ், அதற்குரிய எல்லா இடங்களையும், ஏற்றத்தையும் பெறுவதற்கு மாணவர்களாகிய நீங்கள் பாடுபட வேண்டும்;

"சட்டம் என்பது என்ன?

"மனிதன், பிறந்தது முதல் இறக்கும் வரை வாதாடிக் கொண்டேயிருக்கிருன்; மனிதன் பிறப்பே வாதாட்டத்துடன்தான் துவங்குகிறது; அப்படி மனிதன் வாழ்வு முழுவதும் மேற்கொள்ளுகிற வாதாட்டங்கள்தான், பகுத்து-வகுத்து-தொகுத்து உருவாக்கப்படும் போதுசட்டமாக்கப்படுகிறது; அப்படிப் பட்ட சட்டங்கள் தமிழில் ஆக்க முடியாதென்பதல்ல;

"இப்போது நாட்டில் உள்ள எல்லாச் சட்டங்களையும் தமிழ் மொழியில் ஆக்க முடியும்; ஆனுல், அதற்குத் தேவையான பொறுமை, திறமை நம்மிடம் இருக்கவில்லை என்பதை வேண்டுமானுல் வெட்கத்தோடு ஒப்புக்கொள்ள முடியுமே தவிர, சட்டங்களை தமிழ் மொழியில் ஆக்க முடியாது என்பதை ஒப்புக்கொள்ள இயலாது;

"இரண்டு மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆட்சி செலுத்தியத் தமிழ் மன்னர்கள் தமிழ் மொழியில்தானே ஆட்சி செலுத்தினர்?

"அவர்களிடம் வேண்டுமானுல் இப்போதிருப்பதைப் போன்ற தொகுக்கப்பட்ட விதிகள், உபவிதிகள் அடங்கிய சட்டங்கள் இல்லாதிருந்திருக்கலாம்; ஆனுல் அரசு முறைக்கான சட்டங்கள் இருந்திருக்கத்தானே செய்யும்? அப்படியிருக்கும்போது, எத்தனை ஆண்டு காலத்திற்குப் பிறகு இன்று தொகுக்கப்பட்டுள்ள சட்டங்களை, நாம், தமிழ் மொழியில் ஆக்கிக் கொள்ள முடியாது என்று கூறுவது தவறு;

"வேண்டுமானுல், சட்டங்களைத் தமிழ் மொழியில் ஆக்குவதற்கு நிரம்ப காலம் தேவைப்படலாம்; அதற்கு, நமக்குப் பொறுமைவேண்டும்; நிரம்ப, பெருந் தமிழ்ப் புலவர்கள் வேண்டும்; அவர்கள் இப்போதுள்ள சட்டங்களின் நோக்கங்களையும் உருவாக்க, மூலத்தையும் தெரிந்தவர்களாயிருக்கவேண்டும்; சட்டத்தில் உள்ள வேறு மொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் காணவேண்டும்; இவை எல்லாம் கடினமானதுதான்; ஆனுலும், தமிழ் மொழியின் வளம், அவற்றை எல்லாம் தமிழில் ஆக்க முடியும் என்றே நமக்குச் சொல்லுகிறது; எனவே, சட்டக்கல்லூரி மாணவர்களாகிய நீங்கள், வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்த முற்படுத்துகிற காலத்தில் சட்டங்களைத் தமிழ் மொழியில்ஆக்குவதற்கான பெரு முயற்சியில் ஈடுபட வேண்டும்; மாணவர்கள் புதுப் புதுச் சொற்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவர்களாயிற்றே! அந்தத் திறமையை, சட்ட நுணுக்கச் சொற்களை தமிழ் மொழியில் உருவாக்குவதற்குப் பயன்படுத்த எதிர் காலத்தில் முற்பட வேண்டும்;

"நீங்கள், உங்களிடம் வருகிற வாதி — பிரதிவாதிகளுக்காக வாதிடுபவர்களாக மட்டுமின்றி, தமிழ் மொழிக்காக—தமிழர்களுக்காக வாதிடுபவர்களாகவும் இருக்க வேண்டும்;

"நாங்கள்கூட வழக்குரைப்பவர்கள்தான்;

"நாங்களும் வாதாடுகிற கட்சிக்காரர்களாய்தான் இருக்கிறேம்;

"நாங்கள் வாதாடுகிற வழக்கு நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது;

"நாங்கள் வாதி பக்கத்திலே நிற்கிறேம்; ஆனுல், வாதியோ, சில நேரத்தில், பிரதிவாதி பக்கத்திற்கு ஓடிவிடுகிருன்;

"'இவன் சாதியிலே தாழ்த்தப் பட்டவன் என்று அழைக்கப் படுகிருன்; இவனும் மனிதன் தான்; இவனுக்கும் மனித சமுகத்தில் இதரர்களைப் போன்ற வாய்ப்பும், வாழ்க்கை வசதியும், சமமான மரியாதையும் தரப்பட வேண்டும்; எல்லோரையும்போல இவன் மனிதனுக வாழ வழிவகை வேண்டும்' என்கிறேம் — வழக்காடுகிறேம், நாம்;

"ஆனுல், வாதியைக் கேட்டால், சில நேரத்தில், 'எனக்கொன்றும் தெரியாதுங்களே!' என்று கூறிவிடுகிற நிலைமை இருக்கிறது; இந்த நிலைகள் எல்லாம் மாறவேண்டும்; எல்லா மக்களும் சமஉரிமையும், சமமான வாய்ப்பும், பெற்று, வாழ்வின் இன்ப துன்பங்களில் உரிய பங்கு பெற வேண்டுமென நாங்கள் வாதாடுகிறேம்;

"வறுமை, அறியாமை, பேராவல் இவற்றின் விளைவாகத்தான், நாட்டில் பெரும்பாலான குற்றங்கள் புரியப்படுகின்றன; அதற்கான வழக்குகள் நடைபெறுகின்றன—என்பது, பொதுவாகவே ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்;

"சிலர், 'நாட்டில் குற்றங்கள் நிகழாமலிருக்க, தனிப்பட்டவர்களைத் தூய்மையாக்கி, சன்மார்க்க வானுக்கி, நற்கருத்துக்களைப் போதித்துவிட்டால், அவன் பேராவசை கொள்ள மாட்டான்—வஞ்சகர், சூது இவற்றை நினைக்க மாட்டான்,' என்று கருதுகின்றனர்;

"இப்படி தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரையும் சன்மார்க்கப் போதனைக்குப் பிறகு நற்கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்களாக்குவது சாத்தியமானதுதானு? இப்போதுள்ள நிலைமைகளில்,'இல்லை' என்பதும், அப்படி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கோரிய பலனைத் தரவில்லை என்பதும் நமக்கு நன்ருகத் தெரிகிறது; 'தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரையும் தூயவர்களாக்குவது நடைமுறைக்கு ஒத்ததல்ல; தனி மனிதர் மூலம் சமுதாயத்திற்கு நன்மை செய்வது முடியாது; எனவே மனித சமூகத்தில் உள்ள கொடுமைகளைக் களைந்துவிட்டால் மனிதர்களில் குற்றம் புரிவோர் குறைவர்—வளரமாட்டார்கள்,' என்று நாம் கருதுகிறேம்;

"இப்படி இரண்டு வகையான கருத்துக்களைக் கொண்டவர்களிடையே நெடு நாட்களாக ஒரு வழக்கு நடைபெறுகிறது;

"சமுதாயத்தில் நிலவும் பெருங்கொடுமைகளை—ஏற்றத் தாழ்வு, வறுமை, அறியாமை ஆகியவைகளை ஒழித்துக்கட்டினுலன்றி குற்றங்கள் குறைய முடியாது;

"நமது சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென நாம் விரும்பினுல், நமது பண்பாட்டினை நன்கு தெரிந்தவர்களாக நாம் இருக்க வேண்டும்; நமது பண்பாடு நமக்குத் தெரியாவிட்டால்—அந்தப் பண்பாடு வளரும் மொழியை நாம் பாதுகாக்காவிட்டால் நமது சமுகத்திற்கு நன்மை எதும் செய்ய முடியாது;

"நமது பண்பாடு எது? பிற பண்பாடு எது?—என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்;

"அறம், தருமம்—என்ற இரு சொற்களையும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், ஒன்று போலத்தான் தெரியும்; ஆனுல், அவற்றின் பொருளை விரித்துப் பார்த்தால், வேறுபாடு நமக்குப் புரியும்;

"தருமம்—இங்கே நாம் செய்தால் வேறெரு இடத்திலே அதற்குப் பலன் கிடைக்கும்—என்ற பொருள் கொண்டதாகும்;

"ஆனுல், அறம் என்பது—'பெரியவர்கள் நடந்துசென்ற நல்வழியின் அடிச்சுவடுகளைக் காட்டுவது என்ற பொருள் பெற்றதாகும்;

"இந்த இரண்டு சொற்கள் தரும் விரிந்த பொருளில்மகத்தான வேறுபாடுகொண்ட இருபெரும் வாழ்க்கை முறையினை நாம் தெரிந்துகொள்ள முடியும்;

"தமிழ் நாட்டிலே வாழ்ந்த மன்னர்கள் எல்லாம், ஒருபோதும், தனது ஆட்சியை—தனது சொந்தச் சொத்து என்று கருதியதாக நமக்குத் தெரியவில்லை;

"தமிழ் மன்னர்கள், 'ஆட்சியை நடத்தும் பொறுப்பாளர்கள்' என்றுதான் தங்களை எண்ணிக் கொண்டிருந்தார்களே தவிர, 'அந்த ஆட்சியை எப்படி வேண்டுமானுலும் — என்ன வேண்டுமானுலும் செய்யலாம்,' என்று எண்ணியதாக வரலாறு இல்லை; இது, தமிழர் பண்பாடாக இருந்து வந்திருக்கிறது;

"வேறு ஒரு பண்பாட்டு மன்னர்கள், தங்கள் ஆட்சியை, 'தங்களது சொந்த உடைமை' என்றே எண்ணி நடந்து வந்திருக்கின்றனர்; நாட்டையே சூதாடும் பொருளாக ஆக்கிய 'தருமர்'கள் இருந்திருக்கிருர்கள்; தன்னிஷ்டப்படி ஆட்சியைப் பிறருக்குத் தரும் 'த[illegible]தர்'கள் இருந்திருக்கிருர்கள்;

"இது, தமிழர் பண்பாட்டிற்கும்—'வேறு ஒரு' பண்பாட்டிற்கும் உள்ள மகத்தான வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது;

"தமிழ் மன்னர்கள், 'போர்' என்ருல்—படை வரிசைகளைப் பெருக்கினுர்கள்; கரியையும், பரியையும் கணக்குப் பார்த்தார்கள்; உலைக்கூடத்திற்கு ஓடினுர்கள்; படைக் கலன்களைத் தேடினுர்கள்—என்றுதான் வரலாறு இருக்கிறது; இது தமிழர் பண்பாட்டு வரலாறு;

'ஆனுல் வேறு ஒரு பண்பாட்டு மன்னர்கள், 'போர்' என்ருல்—வேள்வி செய்தார்கள்; ஓமகுண்டம் வளர்த்தார்கள் என்றுதான் இருக்கிறது;

"நான் மாணவர்களைக் கேட்டுக்கொள்வது—'தமிழ் மன்னர்கள் 'போர்' என்ருல் படை திரட்டினுர்கள்' என்ற பண்பாட்டிற்கும் வேறு ஒரு பண்பாட்டு மன்னர்கள், 'போர்' என்ருல் வேள்வி நடத்தினுர்கள்' என்ற பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டினைப் புரிந்துகொள்ளுங்கள்—என்பதைத் தவிர, 'அந்தப் பண்பாட்டுக்காரர்கள் 'வேள்வி' நடத்தியது சரியா—தவரு என்பதைஆராய்ச்சி செய்யுங்கள்' என்பதல்ல;

"எனவே நமது பண்பாட்டினை முதலில் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்; அந்தப் பண்பாடு இதர பண்பாட்டிலிருந்து வேறுபட்டது—மாறுபட்டது—தனித்தது — சிறப்பானது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்; அந்தப் பண்பாட்டைப் புரிந்துகொண்டால்தான், நமது மக்களுக்கு நாம் நன்மை எதும் செய்யமுடியும்; இன்றேல் முடியாது;

"நமக்குக் கிடைத்திருக்கிற பண்பாடு, மிக நல்ல பண்பாடு; தொன்மையும் சிறப்பும் தனித்தன்மையும் பெற்றது; அந்தப் பண்பாடு உலகத்தின் பெருமைக்குரியதாயிருந்தது;

"அந்தப் பெருமைக்குரிய பண்பாட்டையும், அது வளர்ந்த வழியான தமிழ் மொழியையும் பாதுகாக்கவும், போற்றவும், வளர்க்கவும், அவை பெற வேண்டிய உரிய இடங்களை நாட்டில் பெறவும் ஆன முயற்சிகளில் மாணவர்கள் இன்றில்லாவிடினும் நாளை பெரும் அளவில் ஈடுபட வேண்டும்."

"தொழில் நிதிக் கார்ப்பரேஷன் அனுமதித்துள்ள கடன் வசதிகளை 1955 மார்ச் இறுதி வரையில் மொத்தம் 79 கம்பெனிகள் பெற்றுள்ளன" என்றும் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

பொன்மலைப்பட்டி

வருகை

10-9-55 காலை $5\frac{1}{2}$ மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு பொன்மலை புகைவண்டி நிலையத்தில் வரவேற்பளிக்கப்படும். பொன்மலைப்பட்டி, தி. மு. கழக 2-வது ஆண்டு விழா, தோழர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

இரவு 10 மணிக்கு, பொன்மலை இந்தியர் படிப்பக மன்றத்தில், 'இதயக் குரல்'—நாடகம் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும்.

அண்ணுதுரை இலவசப் படிப்பக பொது உறுப்பினர்கட்கு

11—9—55 மாலை 3 மணிக்கு, மதுரை, கீழச்சந்தைப்பேட்டை அண்ணுதுரை இலவசப் படிப்பக பொது உறுப்பினர் கூட்டம், மேற்படி படிப்பகத்தில் நடைபெறும். மேற்படி படிப்பக உறுப்பினர்களும், 33-வது வார்டு இயக்கத் தோழர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

கழகக் கூட்டம்

★

தொட்டம்பாளையம்
(கீழ் பூவானி அருகில்)
அம்மன் கோவிலுக்கு அருகில்
அமைந்திருக்கும் பாண்டியன்
மைதானத்தில்
11—9—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு
தலைவர்: ஆர். சுந்தரம்
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

பட்டுக்கோட்டை தி. மு. க. வட்டக்குழு உறுப்பினர்கட்கு

13—9—55 மாலை 4-மணி அளவில் கமிட்டி அலுவலகத்தில், பட்டுக்கோட்டை வட்டக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். கூட்டத்தில் வட்டக் கழக வரவு-செலவுகள் சரிபார்க்கப்படும்.

பொதுச்செயலாளர்

சுற்றுப்பயணம்

செப். 10 பொன்மலைப்பட்டி
11 இராசீபுரம்
12 பாலக்கோடு
13 அரூர்

பாரதி விழா

10—9—55 பிற்பகல் $2\frac{1}{2}$ மணிக்கு, சென்னை முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் திரு மயிலை சிவமுத்து தலைமையில் 'பாரதி விழா' நடைபெறும். தோழியர் பலர் சொற்பொழிவாற்றுவர்.

திருமணங்கள்

11—9—55 காலை 8 மணிக்கு, காரைக்கால்மேட்டில், தோழர் அய்யப்பெருமாள்-தோழியர் புஷ்பவல்லி திருமணம், தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெறும். தோழர் சொ. ஞானசம்பந்தம், ப. அ. கரீம் ஆகியோர் பேசுவர்.

ஃ ஃ ஃ

11—9—55 காலை 10 மணிக்கு, பெங்களூர் இராமச்சந்திரபுரம், ஆஞ்சநேயர் வீதி, ஜி. 19 எண் இல்லத்தில், தோழர் மு ஆறுமுகம்—தோழியர் கோவிந்தம்மை திருமணம் தோழர் ஏ எம். தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். திரு. கே. சீராமுலு, ப. செல்வராசன், மு சொ. வேந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

12—9—55 காலை 9 மணிக்கு பொதக்குடி மணமகள் இல்லத்தில், தோழர் பிச்சையன்—தோழியர் ராணி திருமணம் தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறும். தோழர் கே. கே நீலமேகம்சொற்பொழிவாற்றுவார்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

11—9—55 காலை 8 மணிக்கு, சென்னை அழகிரி நினைவு மன்றம் (31-வது வட்டம்) பணிமனையில், 'எது தேவை?' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

9—9—55 மாலை 6-30 மணிக்கு சென்னை, முத்தமிழ் மன்றத்தில், தோழர் ராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெறும் சொற்பயிற்சிக் கூட்டத்தில், 'தேர்தலும் நம் கடமையும்' என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

10—9—55 சனி மாலை 6-30 மணிக்கு, இராயபுரம், எண் 59, மன்னுர்சாமி கோயில் தெருவிலுள்ள வட சென்னை குறள்நெறிக் கழக அறையில், தோழர் சுந்தரமூர்த்தி தலைமையில் 'செங்கோன்மை' என்னும் பொருள் குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.